**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**
**2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 339/2021**
**CNR.No.TNDG03-007315-2021**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண். 104/2019
சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

அலெக்ஸ்பாண்டியன் (26/2021),
த/பெ. சுப்பிரமணி,
மேற்குத் தெரு, குரும்பபட்டி,
மீனாட்சிநாயக்கன்பட்டி,
திண்டுக்கல்

...எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 339 of 2021 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police<br>Thadicombu PS. Dindigul in Cr.No.109/2019 |
| 3. | Name of the accused | Alex Pandiyan |
| 4. | Father’s Name | Subramani |
| 5. | Occupation | - |
| 6. | Residence | West Street, Kurumpapatti,<br>Meenakshinaickenpatti, Dindigul. |
| 7. | Age | 26/2021 |

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">31.03.2019</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">31.03.2019<br>11.05.2021</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">01.04.2019</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">12.04.2019</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">17.10.2023</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 27.10.2023 the accused questioned on substance of accusation U/s. 294(b), 324, 506(ii) of IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>27.01.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>10.02.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>24.02.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>10.03.26</td><td>10.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">17.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால், எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts</td></tr>
<tr><td>19.</td><td>Explanation of delay</td><td colspan="3">There is no inordinate in the disposal of the case</td></tr>
<tr><td>20.</td><td>Property order</td><td colspan="3">No case property was seized and hence no property order passed.</td></tr>
</table>

இவ்வழக்கு 11.05.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண். 339/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேஸ்வரன், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

### <u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 31.03.2019ம் தேதி இவ்வழக்கின் வாதி திண்டுக்கல் செல்வதற்காக மீனாட்சிநாயக்கன்பட்டி மேற்கு தெருவில் உள்ள அவரது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது, எதிரி குடித்துவிட்டு வாதியின் வீட்டிற்கு வந்து வாதியை கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், இதை கேட்ட வாதியை எதிரி கையால் அடித்ததாகவும், ஏன் அடிக்கிற என்று வாதி கேட்டபோது எதிரி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் வாதியின் தலை மற்றும் வலது முழங்கையில் ஓங்கி அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், இதைப் பார்த்து அருகில் இருந்த இவ்வழக்கின் சாட்சிகளான ராமராஜ் மற்றும் சீனியம்மாள் ஆகியோர்கள் தடுக்க சென்றபோது எதிரி அதே இரும்பு கம்பியால் மேற்படி இருவரையும் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி, வாதியைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச-வின் படி திண்டுக்கல்

தாடிக்கொம்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 17.10.2023ம் நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக் கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால், எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை, தான் தனது வீட்டின் வாசலில் நின்றுகொண்டிருந்தபோது எதிரி தன் மீது இடித்துவிட்டதாகவும், எதிரி இடித்ததில் தான் கீழே விழுந்ததில் தனக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அப்போது ராமராஜும், சீனியம்மாளும் வந்ததாகவும், நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையம் சென்று தகவல் சொன்னதாகவும், போலிசார் தன்னிடம் எழுதிய தாளில் கையொப்பம் பெற்றதாகவும், பின்பு எதிரியுடன் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் செய்துகொண்டதாகவும், சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும், சமாதான மனுவில் உள்ள நிகழ்நிலைப் புகார்தாரர் கையொப்பம் தன்னுடையது என்றும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை, எதிரி குடித்துவிட்டு ரோட்டில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், தான் அவரை வீட்டுக்கு அழைத்துச்செல்லும்போது தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு கையில் காயம் ஏற்பட்டதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் இரவு வேளையில் எதிரி வெளியில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், தான் வெளியில் நின்று பார்த்தபோது

தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் அதில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

7. புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அலுவலர் பணி மாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 31.03.2019ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த ஜெயலெட்சுமி திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று மருத்துவமனை சென்று வாதியை விசாரித்து புகாரினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், வழக்கினை அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், எதிரியை கடந்த 01.04.2019ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், பின்பு வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**V.எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

8. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 17.03.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது

அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார். அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**VI. வாதுரைகள்:**

**1. அரசு தரப்பில்:**

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரி இவ்வழக்கின் வாதியையும், சாட்சிகளையும் கம்பியால் அடித்து காயப்படுத்தினார் என்பதை மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பில்:**

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று என்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை:**

11. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

12. அரசு தரப்பானது, கடந்த 31.03.2019ம் தேதி இவ்வழக்கின் வாதி திண்டுக்கல் செல்வதற்காக மீனாட்சிநாயக்கன்பட்டி மேற்கு தெருவில் உள்ள அவரது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது, எதிரி குடித்துவிட்டு வாதியின் வீட்டிற்கு வந்து வாதியை கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், இதை கேட்ட வாதியை எதிரி கையால் அடித்ததாகவும், ஏன் அடிக்கிற என்று வாதி கேட்டபோது எதிரி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் வாதியின் தலை மற்றும் வலது முழங்கையில் ஓங்கி அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், இதைப் பார்த்து அருகில் இருந்த இவ்வழக்கின் சாட்சிகளான ராமராஜ் மற்றும் சீனியம்மாள் ஆகியோர்கள் தடுக்க சென்றபோது எதிரி அதே இரும்பு கம்பியால் மேற்படி இருவரையும் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி, வாதியைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச–வின் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

13. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யயப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, அதில் புகார்தாரர் "நான் திண்டுக்கல் செல்வதற்காக எனது வீட்டு வாசலில்

நின்றிருந்தபோது குடித்துவிட்டு வந்த அலெக்ஸ் பாண்டியன் போதையில் என்னை ஏன்டா தேவுடியா மகனே இங்க நிக்குர என்று கேட்டான். நான் திண்டுக்கல் போக நிற்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அலெக்ஸ் பாண்டியன் என்னை கையால் வயதானவர் என்றுகூட பார்க்காமல் அடித்தான். ஏன்டா என்ன அடிக்கிறேனு கேட்டதற்கு கையில் வைத்திருந்த கம்பியால் என் தலையில் ஓங்கி அடித்தான். இதில் எனது தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டது. மீண்டும் அவன் என்னை கம்பியால் அடித்ததில் எனது வலது முழங்கையிற்கு கீழ் இரத்த காயம் ஏற்பட்டது. இதை தடுக்க வந்த ராமராஜையும், சீனியம்மாளையும் அதே இரும்பு கம்பியால் அடித்ததில் ராமராஜிற்கு தலையிலும், சீனியம்மாளுக்கு வலது கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்ததால் என்னை அலெக்ஸ்பாண்டியன் என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான்டா என்று மிரட்டியதாக" புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையிலும் மேற்சொன்ன சங்கதிகள் இடம்பெற்றுள்ளன.

14. ஆனால், அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அவரது முதல் விசாரணையில், " நான் எனது வீட்டின் வசலில் நின்று கொண்டிருந்தபோத எதிரி என் மீது இடித்துவிட்டார். எங்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர் இடித்ததில் நான் கீழே விழுந்தததில் எனக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையம் சென்று தகவல் சொன்னேன். எதிரியும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் செய்து கொண்டோம்" என்று சாட்சியம்

அளித்துள்ளாரே தவிர, எதிரி தன்னை ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாகவோ, கம்பியால் அடித்து காயப்படுத்தியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

15. மேலும், இவ்வழக்கின் கண்ணுற்ற மற்றும் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 அவரது முதல் விசாரணையில், " எதிரி இரவு வேளையில் குடித்துவிட்டு ரோட்டில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நான் அவரை வீட்டுக்கு அழைத்துச்செல்லும்போது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன்" என்று சாட்சியம் அளித்துள்ளரே தவிர, எதிரி அ.சா.1ஐ கம்பியால் அடித்ததாகவோ, அதைத் தடுக்கச் சென்றபோது தன்னையும் கம்பியால் அடித்துக் காயப்படுத்தியதாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணையில் " அன்றையதினம் இரவு வேளையில் எதிரி வெளியில் நின்று சத்தம்போட்டுக்கொண்டிருந்தார். நான் வெளியில் நின்று பார்த்தபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது" என்று சாட்சியம் அளித்துள்ளரே தவிர, மேற்படி எதிரி அடித்து காயப்படுத்தியதாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

16. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தைப் பரிசீலனை செய்யும் போது சம்பவயிடம் பொது இடம் என்று தெரிய வருகிறது. ஆனால், இவ்வழக்கில் வேறு கண்ணுற்ற சாட்சிகளோ அல்லது கேள்விப்பட்ட சாட்சிகளோ அரசு

தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்டு அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் எதிரி புகார்தாரரை ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாகவோ, கம்பியால் அடித்து காயப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை.

17. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.6 ஆன காயச்சான்று, அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆன விபத்து பதிவேடு ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது, புகார்தாரருக்கும் சாட்சிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. ஆனால், மேற்சொன்னவாறு, புகார்தாரரும் மற்றும் மற்ற சாட்சிகளும் கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளபோது, எதிரியின் குற்ற செய்கையால் தான் மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்று கருத இயலாது.

18. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால், எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

19. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச் சொத்துக்கள் பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் புதன்கிழமை இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.01 18:10:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பாண்டியன்<br>த/பெ. கிருஷ்ண கோனார் | 27.01.2026 | அ.சா.ஆ.1<br>அ.சா.ஆ.2 |
| 2. | அ.சா.2 | ராமராஜ்<br>த/பெ. வீரப்பன் | 10.02.2026 | – |
| 3. | அ.சா.3 | சீனியம்மாள்<br>க/பெ. மாசாணக்கருப்பு | 24.02.2026 | – |
| 4. | அ.சா.4 | தனம்<br>(சிறப்பு சார்பு ஆய்வாளர்) | 10.03.2026 | அ.சா.ஆ.3<br>முதல்<br>அ.சா.ஆ.8 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 31.03.2019 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.1 | 27.01.2026 | சமாதான மனுவில் உள்ள நிகழ்நிலைப் புகார்தாரர் கையொப்பம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 31.03.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.4 | 01.04.2019 | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.4 | 01.04.2019 | மாதிரி வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.4 | 31.03.2019 | காயச்சான்று |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.4 | 31.03.2019 | விபத்து பதிவேடு (ராமராஜ்) |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.4 | 31.03.2019 | விபத்து பதிவேடு (சீனியம்மாள்) |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.01 18:10:28 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.